மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இயலாது.

திரு. த. ரத்தினவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெறும்பூர பாய்லர் தொழிற்சாலையின் பகுதியிலுள்ள மக்களின் நீண்டநாள் கோரிக்கை இது. குக்கிராமங்களுக்கெல்லாம் பஸ் போக்குவரத்தை விரிவுபடுத்தி வரும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் அந்தப் பகுதியிலுள்ள 15 ஆயிரம் தொழிலாளர்கள் மற்றும் பொது மக்கள் பயன் அடையும் வகையில் சிறப்பு திட்டத்தின் மூலமாகவாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே போக்குவரத்தை புதியதாக உருவாக்கித் தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அங்கீகரிக்கப்படாத பகுதியாக இருக்கிற காரணத்தால் அங்கே டெர்மினஸ்கள் உருவாக்கப்படவில்லை. ஆகவே அந்த பாய்லர் தொழிற்சாலை அருகில் பேருந்துகள் நிறுத்தப்படுகிற சூழ்நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 147, செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

147—

புவனகிரி தொகுதியில் நெசவாளர் சங்கம்

* 1380 செல்வி கோ. மல்லிகா:

மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரி தொகுதி நெசவாளர்கள் கைத்தறித் தொழிலையே நம்பியிருப்பதால் அவர்களின் பொருளதார நிலை சீரடைய நெசவாளர் சங்கம் அமைத்து விசைத்தறிகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த கருத்துரு பெறப்பட்டால், துறை ஆவன செய்யும்.

1992 மார்ச் 10]

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே முதன் முதலாக கைத்தறிகளை விசைத் தறிகளாக மாற்றிப் புரட்சிகரமான திட்டத்தை அறிவித்துள்ள நமது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி தெரிவித்து, புவனகிரி மக்கள் கைத்தறித் தொழிலையே நம்பி வாழ்வதால் அவர்கள் வாழ்வில் ஒளி ஏற்றி வைக்க, வரும் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ள 5000 விசைத் தறிகளின் ஒரு பகுதியையாவது புவனகிரியில் நிறுவ அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏ. டி. ஆபிஸ் மூலமாகவோ அல்லது அந்த சரகத்தினுடைய அதிகாரிகள் மூலமாகவோ கருத்துரு வருமே யானால் அதிலே துறை ஆவன செய்யும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :
வினா எண் 148, டாக்டர் தே. குமாரதாஸ், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

148—

சித்தாறு பட்டணங்கால் வாய்க்கால் செப்பனிடல்.

*149 டாக்டர் தே. குமாரதாஸ் :
மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சித்தாறு பட்டணங்கால் கால்வாயிலுள்ள அனைத்து வாய்க்கால்களும் சிமெண்ட் தளம், மதகுகள் இல்லாமல் பழுதடைந்துள்ளது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டிலேயே அவைகளை செப்பனிட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சித்தாறு பட்டணங்கால் வாய்க்கால்களில் சிமெண்ட் லைனிங் மற்றும் மதகுகள் சில இடங்களில் பழுதடைந்துள்ளன. தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் சிமெண்ட் லைனிங் மற்றும் மதகுகள் சீர் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்தாறு பட்டணங்கால்வாயில், அனைத்துக் கால் வாய்களும் ஒட்டு மொத்தமாக, குறிப்பிட்டு இந்த இடம் தான்